# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SPECIAL COURT TO DEAL WITH THE CASES OF OFFENCES IN CONTRAVENTION OF THE PROVISIONS OF THE MINES AND MINERALS (D&R) ACT, 1957, MADURAI**

**************

| | | |
|---|---|---|
| Case No | : | Spl.C.C.No.63/2021 |
| Deposition of witness | : | LW 6/ PW3 |
| Name | : | **திரு.வேல்முருகன்** |
| Father's Name | : | அழகு |
| Village | : | மேலகண்டனி |
| Taluk | : | சிவகங்கை |
| Calling | : | தலைமை நில அளவர் |
| Age | : | 43/26 |
| **Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2026** | | |

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி தொடங்கிய நேரம் : 12.13PM

**முதல் விசாரணை :**

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ் மங்கலம் வட்டத்தில் தலைமை நில அளவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2013 ம் ஆண்டில் மதுரை மாவட்ட ஆட்சியர் உத்தரவின் பேரில் மேலூர் வட்டம் , திருவாதவூர் உள்வட்ட அளவராக பணிபுரிந்த சமயத்தில் 22.08.2013, 23.08.2013 ஆகிய தேதிகளில் மதுரை கிழககு வட்டம்,

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.05 15:21:29 +0530

இடையபட்டி கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் மற்றும் புவியியல் துறை அலுவலர்கள், நில அளவர்கள் அனைவரும் இடையபட்டி கிராமத்திற்கு சென்று புல எண்.59/2 புல எண்ணின் நான்கு பக்க எல்லைகளை அளவை செய்து கண்டறிந்தோம். அந்த புல எண்ணில் 101 கிரானைட் கற்கள் அடுக்கப்பட்டிருந்ததை தெரிந்துகொண்டோம். பின்னர் அந்த கிரானைட் கற்களின் நீளம் , அகலம், உயரம் ஆகியவற்றை புவியியல் துறை அலுவலர்கள் அளவை செய்து குறிப்பெடுத்துக் கொண்டனர். பின்பு அனைவரும் அன்றைய தேதியில் கனிம வள அலுவலகமாக செயல்பட்டு வந்த விருந்தினர் மாளிகைக்கு சென்று அங்குள்ள தட்டச்சரிடம் இந்த குறிப்பினை கொடுத்து தட்டச்சு செய்யுமாறு கூறினோம். அவர் தட்டச்சு செய்த பின் எடுக்கப்பட்ட குறிப்பிற்கும் அவர் கொடுத்த அறிக்கைக்கும் சரியாக உள்ளதா என சரிபார்த்து நான் மற்றும்நில அளவர்கள் , கிராம நிர்வாக அலுவலர், புவியியல் துறை அலுவலர்கள் அனைவரும் கையொப்பமிட்டு அங்குள்ள மண்டல துணை அலுவலரிடம் ஒப்படைத்தோம். அந்த பட்டியல் ஏற்கனவே Ex.P.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை :**

Ex.P.1 ல் சர்வே எண் .59/2 ல் முதல் பக்கத்தில் பட்டாதாரர் என்ற காலத்தில் M.நாகராஜன் என்று தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.59/2

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.05 15:21:35 +0530

ல் Date of Inspection என்ற காலத்தில் 22.08.2013, 23.08.2013 ஆகிய இரண்டு தேதிகள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த இரண்டு தேதிகளிலும் ஒவ்வொரு தேதியிலும் எவ்வளவு கற்கள் அளவீடு செய்யப்பட்டது என்று தனித்தனியாக குறிப்பிட்டு காட்டடப்படவில்லை என்றால் சரிதான் . Ex.P.1 ல் அளவீடு பணியில் ஈடுபட்டதாக சொல்லப்படும் உதவி புவியியலாளர்கள் எந்த குழுவை சேர்ந்தவர்கள் என்றால் அது எனக்கு தெரியாது . Ex.P.1 முழுவதும் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரத்தை அறுதியிட்டு காட்டும்பொருட்டு அந்த வாசகங்கள் இடம்பெறவில்லை என்றால் சரிதான் . யாரால் தட்டச்சு செய்யப்பட்டது என்ற வாசகமும் இல்லை என்றால் சரிதான் . Ex.P.1 ல் ஆவணத்தில் எந்த இடத்திலாவது எடுத்த குறிப்புகளோடு ஒப்பீடு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டது என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான் . Ex.P.1 ல் காலம் எண் .1, 5 ஆகியவை அனைத்து புல எண்களுக்கும் கையொப்பம் செய்யப்படாமலும், பெயர் எழுதப்படாமலும் காலியாக உள்ளது என்றால் சரிதான் . Ex.P.1 ஆவணங்கள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் யாரால் பெறப்பட்டது என்ற வாசகமோ , அவரது கையெழுத்தோ இல்லை என்றால் சரிதான். எனக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் எழுத்துபூர்வமான உத்தரவு பிறப்பித்தாரா, அவ்வாறு பிறப்பித்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நில அளவர் என்ற முறையில் நானோ ,

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.05 15:21:39 +0530

அந்த பணியில் ஈடுபட்டதாக சொல்லப்படும் கிராம நிர்வாக அதிகாரி மூலமாகவோ இந்த நிலத்தின் உரிமையாளர் யார் என்று தெரிந்து அவருக்கு அறிவிப்பு ஏதேனும் செய்தோமா என்றால் இல்லை. நான் எனது பணி நிமித்தமாக செல்லும்போது அது குறித்து எனது டைரியில் குறிப்பது வழக்கம் என்றால் சரிதான் . அதுபோன்று இந்த வழக்கு சம்பந்தமாக சென்றவிவரத்தை எனது டைரியில் குறித்து அது வழக்கிற்கு ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. Tamilnadu Survey and Boundries Act 1923 ன்படி பிரிவு 7 மற்றும் 10 ஐ கடைபிடிக்காமல் செய்யப்பட்டிருப்பதால் இந்த பணி சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல . Ex.P.1 ல் காட்டப்பட்டுள்ள கற்கள் சந்தை மதிப்புள்ள கற்களா , சந்தை மதிப்பு இல்லாத கற்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் . சர்வே எண் .59/5B என்ற புலத்திற்கு தமிழக அரசால் உரிமம் வழங்கப்பட்ட குவாரி இருந்ததை பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை . சர்வே எண் .59/2 புல எண்ணிற்கு அருகாமையில் 100 மீட்டர் தொலைவிற்குள்ளாகவே G.O.No.(3D) No.16 Industries (MMB-1) Department dated 17.03.2005 ன் படி பி.ஆர்.பி எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்திற்கு குவாரி பணி செய்ய 20 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட குவாரி குத்தனை உரிமத்தின் நகல் தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால்சரிதான் . அது **Ex.D.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி குவாரி செயல்பட்டு வந்தது எனவும் , அதில் எடுத்த விற்பனைக்கு ஆகாத கற்கள் தான் இங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்தது என்றால்

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.05 15:21:45 +0530

அது பற்றி எனக்கு தெரியாது. Ex.P.1 நான் சொன்ன தேதியில் எந்த வித அளவீடு பணிக்கும் செல்லவில்லை என்றாலும், பின்னிட்டு சென்னையில் உள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறையால் தயார் செய்து கொடுக்கப்பட்டு நான் கையொப்பம் செய்ததால் தான் இரண்டு காலங்கள் காலியாக விடப்பட்டு காணப்படுகிறது என்றும், வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல . இந்த ஆவணத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி முடிவடைந்த நேரம் : 12.30PM

(ஒம்./-)******

சாட்சியால் திறந்த மன்றத்தில் சாட்சியமளிக்கப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.05 15:21:51 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,

கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான

குற்ற வழக்குகள் தனி சிறப்பு நீதிமன்றம்,

மதுரை.